மேலூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை பூ.பாரத்.பி.இ.,

நக.எண்.2759/2024/எப்1 நாள்.28.03.2025

பொருள்: மனைப்பிரிவு– மேலூர் நகராட்சி– மேலூர் கிராமம் வார்டு A, பிளாக் 22, நகரளவு எண். 204/2, 204/8, ல் காந்திஜி பூங்கா ரோடு என்ற இடத்தில் 1.69 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ள மனையிடத்திற்கு இறுதி அனுமதி வழங்குதல்– தொடர்பாக.

பார்வை :

1. திருமதி.R.அஷ்டலெட்சுமி மற்றும் M.மோகன், க.எண்.78 , காந்திஜி பூங்காரோடு, மேலூர் என்பவரின் விண்ணப்பம் நாள் 11.12.2024
2. சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி2 நாள்.20.10.2022
3. உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ) மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் அனுமதி ந.க.எண்.29677 /ZGBUPPCE/SWP/2024 நாள்.21.09.2024
4. இந்நகராட்சி பொறியாளர் அறிக்கை நாள்.31.01.2025
5. திருமதி.R.அஷ்டலெட்சுமி மற்றும் M.மோகன் என்பவரின் விண்ணப்பம் நாள்.10.02.2025
6. இந்நகர்மன்ற தீர்மானம் எண். 723 நாள்.21.03.2025
7. நகரமைப்பு ஆய்வாளரின் அறிக்கை நாள்.24.03.2025

****

ஆணை

பார்வை–3ல் கண்டுள்ள மதுரை நகர்ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களின் ஆணையின்படி, பார்வை 2ல் காணும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின்படியும், பார்வை–1ல் காணும் மனுதாரர் திருமதி.R.அஷ்டலெட்சுமி மற்றும் M.மோகன் என்பவரின் விண்ணப்பத்தில் வார்டு A, பிளாக் 22, நகரளவு எண். 204/2, 204/8, ல் காந்திஜி பூங்கா ரோடு என்ற இடத்தில் 1.69 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ள மனையிடத்திற்கு இறுதி அனுமதி வழங்க கோரியதை தொடர்ந்து, பார்வை 4ல் காணும் இந்நகராட்சி பொறியாளரின் அறிக்கையின்படி அடிப்படை கட்டமைப்பு கட்டணமாக ரூ.6700000/– மதிப்பீடு தயார்செய்யப்பட்டது. பார்வை–5ல் காணும் தங்கள் விண்ணப்பத்தின்படி தாங்களாகவே அடிப்படை கட்டமைப்புகளை அமைத்துகொள்ள ஒப்புதல் தெரிவித்து பணிகள் அனைத்தும் தங்களாலே மேற்கொள்ளப்பட்டது.

பார்வை 3ல் கண்டுள்ள இணையதள அனுமதி ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, பார்வை 6ல் இந்நகர்மன்ற தீர்மானத்தின் ஒப்புதலின்படி, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி அனுமதி வழங்கப்படுகிறது.

1) நகராட்சிக்கு தானமாக எழுதிக்கொடுத்த சாலையில் பின்நாளில் ஆக்கிரமிப்புகள் எதுவும் மேற்கொள்ளக்கூடாது.
2) தணிக்கையில் பின்னாளில் ஏதேனும் ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டால் அதனை நிவர்த்தி செய்ய தங்களையே முழுபொறுப்பாக்கப்படும்.
3) மேற்படி மனையிடத்தில் மின்சார வாரியத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பே மின்கம்பங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும். அதன் விபரத்தினை புகைப்படத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.
4) மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்திற்கும் ஒப்புதல் அளித்து ரூ.20 மதிப்புள்ள முத்திரையிட்ட தாளில் உறுதிப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.
5) மனுதாரரால் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களின் உண்மைத்தன்மையின்படி வழங்கப்படும் இவ்வனுமதியானது குறைபாடுகள் ஏதும் பின்நிகழ்வில் அறியப்பட்டால் எவ்வித முன்னறிவிப்பும்இன்றி ரத்து செய்யப்படும்.
6) தணிக்கை ஆய்வின்போது கூடுதல் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டால் தங்கள் செலுத்திய வைப்புத்தொகையில் ஈடுசெய்யப்படும்.

0/04

ஆணையாளர்,
மேலூர் நகராட்சி

28/3/2025

இணைப்பு: வரைபடம்
பெறுநர்
திருமதி.R.அஷ்டலெட்சுமி மற்றும் M.மோகன்,
க.எண்.78 , காந்திஜி பூங்காரோடு,
மேலூர்,
மதுரை.

நகல் : உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ)
மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை.
நகல்: நகரமைப்பு ஆய்வாளர், மேலூர் நகராட்சி.